# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 14,518—1965 සැප්තැම්බර් 30 වැනි බ්‍රහස්පතින්ද — 1965.9.30**

14,518 ம் இலக்கம்—1965 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

ம. தே. கா. இல. என். 106/65

### விசாரணை ஆணைக் குழுக்கள் சட்டம்

**கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபன ஆணைக்குழு கால நீடிப்பு**

கூட்டுறவு மொத்த விற்பனைத் தாபனம் இயங்கிய முறையும் அதன் நிர்வாகமும் ஆகியனபற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கென (393 ம் அத்தியாயமான), விசாரணை ஆணைக்குழுக்கள் சட்டத்தின் 2 ம் பிரிவின் கீழ் (1965, ஜூன் 23 ம் தேதிய, 14,432 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1965, ஜூன் இருபத்திமூன்றும் நாளன்று தேதியிடப்பட்ட எழுத்தாணை மூலம் மாற்றப்பட்டபடியான) 1965, மே 7 ந் தேதிய 14,392 ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட, 1965, மே ஆறும் நாளன்று தேதியிடப்பட்ட எழுத்தாணை மூலம் நியமனஞ் செய்யப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கான காலத்தை, அதியுத்தமராம் மகாதேசாதிபதி, அச்சட்டத்தின் 4 ம் பிரிவினுல் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்து, 1966, மார்ச் முப்பத்து ஒன்றும் நாள் வரை நீடித்திருக்கிருரென பொது மக்கள் அறிவதற்கென இத்தால் வெளியிடப்படுகின்றது.

அதி உத்தமனுரின் கட்டளைப்படி,

நி. விஜேவர்தன,
மகா தேசாதிபதியின் செயலாளர்.

மகா தேசாதிபதி காரியாலயம்,
கொழும்பு,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 30 ந் உ.

10–257

---

### 1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச் சட்டம்

1963 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டத்து 30 (1) ஆம் பிரிவின்படி எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் பதில் நிதியமைச்சர் நனேதிரி விமலசேன ஆகிய நான் மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 29 ஆம் பிரிவின் கீழ் பிறப்பிக்கப்பட்டதும் 1964, யூலை 31 ஆந் தேதியின் 14,129 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட நாணயமாற்று வரிச்சட்டத்தால் திருத்தப்பட்டவாறு 1964, சனவரி 10 ஆந் தேதியின் 13,915 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான நாணயமாற்று வரிக்கட்டளையை 1965, ஒற்ருேபர் 1 ஆந் தேதியிலிருந்து இத்தால் தள்ளுபடி செய்கின்றேன்.

என். விமலசேன,
பதில் நிதியமைச்சர்.

கொழும்பு,
1965 ம் ஆண்டு செத்தெம்பர் மீ 29 ந் உ.

9–256


இலங்கை வாழைச்சேனை ஈஸ்ரேண் பேப்பர் மில்ஸ் கோப்பரேஷனுல் உற்பத்தி செய்யப்பட்ட காகிதத்தில்
இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.